பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

1 அறிமுகம் 21

2 அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்தின் அடையாளங்கள் 32

1. சகோதரர்களாக இணைந்திருப்பது 32
2. பித்அத்தை விலக்கி ஸுன்னாவைப் பற்றிப்பிடிப்பது 32
3. நபித்தோழர்கள் விசயத்தில் நாவைப் பாதுகாப்பது 34

3 வழிகெட்ட பிரிவினர்களால் ஏற்பட்ட விளைவுகள் 36

- அடுத்தவர்களை பித்அத் செய்பவர்கள் என்றும், பெரும் பாவிகள் என்றும், இறைநிராகரிப்பாளர்கள் என்றும் கூறுவதின் விளைவுகள் 39
- பெரும்பாவம் என்றால் என்ன? ஒரு முஸ்லிம் எப்பொழுது பெரும்பாவியாக ஆகுவான்? 40
- பெரும்பாவம் செய்தவர்கள் குறித்த கவாரிஜ்களின் கொள்கை 41
- அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்தின் பார்வையில் பெரும்பாவம் செய்தவனின் நிலை 42
- பெரும்பாவி இறைநம்பிக்கையைவிட்டு வெளியேறியவன் அல்ல என்பதற்கான ஆதாரங்கள் 45

4 பித்அத்வாதி எனத் தீர்ப்புச் செய்வதின் விளைவுகள் 48

- மார்க்க அறிஞர்களின் அந்தஸ்தை அறிவது 50
- பித்அத்தின் வகைகள் 52
- ஒருவனை இறைநிராகரிப்பாளன் எனக் கூறுதல் 53
- கருத்துச் சுருக்கம் 58
- நலவை நாடுவதின் அவசியம் 62

2

அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்தின் அடையாளங்கள்

1. சகோதரர்களாக இணைந்திருப்பது

அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்தின் அடையாளம் அவர்கள் ஒரே கரத்தைப் போன்று இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் அனைவரும் சகோதரர்கள். ஆகவே, அவர்களில் சிலர் சிலரை இறைநிராகரிப்பாளர்கள் என்று கூறமாட்டார்கள். அவர்களில் ஒருவர் மற்றவரை பெரும்பாவி என்று கூறமாட்டார்கள். அவர்களில் சிலர் சிலரை நவீன அனுஷ்டானங்களைப் பின்பற்றுபவர்கள் (பித்அத்காரார்கள்) என்று கூறமாட்டார்கள். ஏனெனில், இவ்வாறு கூறுவது அனைத்தும் வழிகெட்ட கூட்டத்தின் அடையாளமாகும்.

2. பித்அத்தை விலக்கி ஸுன்னாவைப் பற்றிப்பிடிப்பது

அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்தினரின் அடையாளங்களில் ஒன்று, அவர்கள் நபியவர்களின் வஸிய்யத்தின்படி (இறுதி உபதேசத்தின்படி) நடப்பார்கள். அதாவது, அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்:

مَنْ يَعِشْ مِنْكُمْ فَسَيَرَى اخْتِلَافًا كَثِيرًا, فَعَلَيْكُمْ بِسُنَّتِي وَسُنَّةِ الْخُلَفَاءِ الرَّاشِدِينَ الْمَهْدِيِّينَ مِنْ بَعْدِي عَضُّوا عَلَيْهَا بِالنَّوَاجِذِ وَإِيَّاكُمْ وَمُحْدَثَاتِ الْأُمُورِ

உங்களில் யார் வசிப்பாரோ அவர் (இனிவரும் காலங்களில்) அதிகமான கருத்துவேறுபாட்டைக் காண்பார். அப்போது என்னுடைய வழிமுறையையும் எனக்குப் பின்னால் உள்ள நேர்வழி பெற்ற, நேர்வழி காண்பிக்கக்கூடிய கலீஃபாக்களின் வழிமுறையையும் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். கடைவாய்ப் பற்களினால் அவற்றைக் கடித்துக்கொள்ளுங்கள். (அதாவது,

3

வழிகெட்ட பிரிவினர்களால் ஏற்பட்ட விளைவுகள்

✿

அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்துக்கு மாற்றமான பிரிவினர்கள் தோன்றும்போதெல்லாம், அருவருப்பான பல செயல்பாடுகளும், தீமையான பல பிரிவினைகளும் அவர்களிடம் காணப்படும். அவற்றினால் மக்களில் பெரும்பான்மையானோர் கவரப்பெற்று, அவற்றைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் எல்லா நேரங்களிலும் அவற்றை பரப்ப ஆரம்பித்துவிடுவார்கள். இவை மனித, ஜின் இனத்தார்களின் ஷைத்தான்களால் ஏற்படக்கூடியவை. இந்தப் போக்குப் பெரும் அபாயமாகும். ஏனெனில், இது இஸ்லாமிய சமுதாயத்தின் தனித் தன்மைக்கு குந்தகம் விளைவிப்பதாகும்.

அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்துக்கு மாற்றமாக உள்ள வழிகெட்ட பிரிவினர்கள் தங்களுக்கு எதிர்க்கருத்து கொண்டவர் களை பித்அத் புரிவோர் என்றும், பெரும்பாவிகள் என்றும், இறைநிராகரிப்பாளர்கள் என்றும் தங்களின் அருவருப்பான செயல்பாடுகள் மற்றும் பிரிவினைகளால் தூற்றுகிறார்கள். அவர் களைப் பின்பற்றுபவர்களும் அவற்றைப் பரப்ப ஆரம்பித்து விடுகிறார்கள். அது மட்டுமன்றி, குழப்பம் விளைவிப்பதே அவர்களுடைய பாதையின் அடித்தளமாக உள்ளது.

அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்துடைய அடையாளமே மேற்சொல்லப்பட்ட எதிர்க்கருத்துள்ளவர்களைத் தூற்றுகின்ற வேலைகளில் ஈடுபடாது இருப்பதாகும். ஆனால், அவர்களுக்கு மாற்றமாக உள்ளவர்களின் அடையாளமோ, அவர்கள் மற்றவர் களை பித்அத்காரர்கள், பெரும்பாவிகள், இறைமறுப்பாளர்கள் என்று கூறுவதாக உள்ளது. காலம் செல்லச் செல்ல, பல வழிமுறை கள் பெருகப் பெருக வழிகெட்ட பிரிவினர்களின் பாதையில்

பெரும்பாவம் என்றால் என்ன? ஒரு முஸ்லிம் எப்பொழுது பெரும்பாவியாக ஆகுவான்?

'பெரும்பாவம்' என்பதைக் குறிக்கின்ற அறபுப் பதம் 'அல்ஃபிஸ்க்' என்பதாகும். இதற்கு 'அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதை விட்டு வெளியேறிவிடுதல்' என்பது பொருளாகும். இதில் ஒரு வகையாக வெளியேறுதல் என்ற பொருள் இருந்தாலும், பெரும்பாவம் செய்தவன் இஸ்லாமை விட்டும் வெளியேறியவனாகமாட்டான். ஆயினும், பெரும்பாவம் செய்தவனாக ஆகிவிடுவான். விபசாரம், மது அருந்துதல், திருட்டு, வட்டி உண்ணுதல் இவை போன்ற பெரும்பாவங்களை மார்க்கம் ஆகுமாக்கியுள்ளதாகக் கருதாமல் இவற்றை ஒரு முஸ்லிம் செய்தால் அவன் பெரும்பாவியாக மட்டும் கருதப்படுவான். ஏனெனில், அந்த முஸ்லிம் இந்த காரியங்களை மனஇச்சைக்காகவே செய்கிறான். (மார்க்கம் தடுத்திருப்பதை அவன் நம்புவான்; அதை மறுக்கமாட்டான்.) இவ்வாறான பெரும்பாவம் செய்பவன் குறித்து அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத்தின் கொள்கை, அவன் இறைநம்பிக்கை குறைவாக உள்ள இறைநம் பிக்கையாளன் ஆவான்; அல்லது அவன் இறைநம்பிக்கையோடு தான் உள்ளான். அவனது பெரும்பாவத்தினால் பெரும்பாவி ஆகிவிடுகிறான். அவனும் இறைநம்பிக்கையாளர்களில், ஏகத்து வத்தை ஏற்றவர்களில் ஒருவன்தான்.

மார்க்கத்தை விட்டும் ஒருவனை வெளியேற்றிவிடக்கூடிய இணைவைப்பின் பண்புகளில் எதுவும் அவனிடம் இல்லாவிட் டால், இறைநம்பிக்கை என்ற பெயரும், இஸ்லாம் என்ற பெயரும் அவனிடம் நிலைகொண்டிருக்கும். அவன் முஸ்லிமாகவும், இறைநம்பிக்கையாளனாகவுமே இருப்பான். ஆயினும், இறை நம்பிக்கையில் குறையுள்ளவனாக இருப்பான். இதையே பெரும் பாவம் என்றும், அச்செயலைச் செய்தவனைப் பெரும்பாவி என்பதாகவும் அழைக்கப்படுகிறது.

ஒருவன் தண்டனை நிறைவேற்றப்படுகின்ற ஒரு பெரும்பாவத் தை செய்து அவனுக்குத் தண்டனை அளிக்கப்பட்டுவிட்டாலும், அவன் இறைநம்பிக்கையாளர்களில் ஒருவனாகவே கருதப்படு வான். இறைநம்பிக்கையாளர்களிடம் நடந்துகொள்ளப்படுவது போன்றே அவனிடமும் நடந்துகொள்ளப்படும். ஏனெனில், அவன் இறைநம்பிக்கையாளர்களில் ஒருவனாக இல்லாவிட்டால், அவனுக்குத் தண்டனை வழங்கப்படுவது மட்டும் போதுமானதல்ல;

4

பித்அத்வாதி எனத் தீர்ப்புச் செய்வதின் விளைவுகள்

✿

பித்அத் என்பதற்கு அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத் இவ்வாறு வரைவிலக்கணம் கூறுகிறார்கள்:

'மார்க்கத்திலே இல்லாததை மார்க்கத்திலே புதிதாக உண்டு பண்ணுவது. அல்லாஹ்வின் மார்க்கத்தில் இல்லாத, குர்ஆனிலும் நபிமொழியிலும் இல்லாத ஒரு வணக்கக் காரியத்தை வைத்து அதன் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முடியும் என நினைத்து அதைச் செயல்படுத்துவது பித்அத் ஆகும்.'

مَنْ عَمِلَ عَمَلًا لَيْسَ عَلَيْهِ أَمْرُنَا فَهُوَ رَدٌّ

நம்முடைய கட்டளை இல்லாத ஒரு காரியத்தை யார் செய்தாரோ அது மறுக்கப்பட்டதாகும். (ஆயிஷா ﵂, முஸ்லிம் 1718)

مَنْ أَحْدَثَ فِي أَمْرِنَا هَذَا مَا لَيْسَ مِنْهُ، فَهُوَ رَدٌّ

நம்முடைய இந்தக் காரியத்திலே இல்லாததை யார் புதிதாக ஏற்படுத்தினாரோ அது மறுக்கப்பட்டதாகும். (அறிவிப்பு: ஆயிஷா ﵂, முஸ்லிம் 1718)

இந்த நபிமொழிகளை இக்கருத்துக்கு ஆதாரமாக அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத் முன்வைக்கின்றது. ஏனெனில், முஸ்லிம்கள் அல்லாஹ்வும் ரஸூலும் வணக்க வழிபாடாகக் காண்பித்துள்ளவற்றை மட்டுமே வணக்கமாக நிறைவேற்றுவது கட்டாயமாகும். எனவே, அல்லாஹ்வும் தூதரும் மார்க்கமாக ஆக்காத எதையும் அவர்கள் அதிகப்படுத்தமாட்டார்கள். அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்:

بَلَىٰ مَنْ أَسْلَمَ وَجْهَهُ لِلَّهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهُ أَجْرُهُ عِنْدَ رَبِّهِ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

(உண்மை) அவ்வாறில்லை! எவர் (அல்லாஹ்வுக்காக) நன்மை செய்து, தம்மை (முற்றிலும்) அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்து

இரக்கமுடையவனுமாக இருக்கின்றாய்!' என்று பிரார்த்தனை செய்துகொண்டே இருக்கின்றார்கள். (குர்ஆன் 59:10)

பித்அத்தின் வகைகள்

பித்அத் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல. சில பித்அத்துகள் இறைநிராகரிப்பில் கொண்டு போய் சேர்த்துவிடக்கூடியவை. சில அதைவிடக் குறைவானவை. அவற்றைச் சரியாக அளவிடுவதும் அவை குறித்து மார்க்க அறிஞர்களிடம் சென்று தெரிந்துகொள்வதும் அவசியமாகும். ஏனெனில், மார்க்க அறிஞர்கள் பித்அத்தை இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர்.

ஒன்று, இறைநிராகரிப்பில் கொண்டு சேர்த்துவிடக்கூடிய பித்அத். உதாரணமாக, ஜஹ்மிய்யா[7] மற்றும் இவர்களைப் போல் வரம்பு

---

7 ஜஹ்மிய்யா : ஹிஜ்ரீ முதல் நூற்றாண்டில் இராக்கின் கூஃபாவில் பிறந்த ஜஹ்ம் இப்னு சஃப்வான் என்பவனைப் பிற்பற்றியவர்கள். இவன் யூத வமிசத்தைச் சேர்ந்தவன். அல்ஜஹ்த் அல்திர்ஹம் என்பவனின் மாணவனாக இருந்தான். சிரியாவைச் சேர்ந்த அல்ஜஹ்துதான் (கொல்லப்பட்ட ஆண்டு ஹி.118/124) முதன் முதலில் குர்ஆனை ஒரு படைப்பு என்றவன். மூஸாவிடம் அல்லாஹ் பேசவில்லை என்றவன். இவனது நூதனக் கொள்கைகளையும் இன்னும் பலவற்றையும் பரப்பினான் ஜஹ்ம். மண்ணறை வேதனை, ஹவ்லுல் கவ்ஸர், மறுமையில் ஷஃபாஅத், சொர்க்கம் நரகம் படைக்கப்பட்டிருப்பது, ஜமாஅத் தொழுகை, ஜுமுஆ மற்றும் ஈது தொழுகைகள் அனைத்தையும் மறுத்தான். குறிப்பாக, அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள் அனைத்தையும் நிராகரித்தான். படைப்பது, வல்லமைகொண்டிருப்பது ஆகிய இரண்டை மட்டும் ஏற்றான். அல்லாஹ் அவனது தன்மையால் எங்கும் இருக்கிறான் என்ற அத்துவைத, கிரேக்க கொள்கையைப் போதித்தான். ஹிஜ்ரீ 128 (கி.பி.745/6)இல் உமைய்யா ஆட்சியாளர் நஸ்ர் இப்னு சய்யாரால் மரண தண்டனை விதிக்கப்பட்டான். இவனையும் இவனது கூட்டத்தையும் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல், புகாரீ, தாரிமீ போன்ற அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்கள் பலரும் ஏகோபித்து காஃபிர்கள் எனத் தீர்ப்பளித்துள்ளார்கள். பிஷ்ர் இப்னு அல்மாரிசி (இறப்பு ஹிஜ்ரீ 218) எனும் இவனது மாணவனின் பிரசாரத்தால் இவனதுகொள்கைகள் பரவத் தொடங்கின. இக்கூட்டம் விதி விசயத்தில் ஜபரிய்யா கொள்கையில், அதாவது விதியினால் மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள், செயல்பட சுதந்திரம் எதுவுமில்லை என்றார்கள். ஈமான் விசயத்தில் முர்ஜிஆ கொள்கையில், அதாவது உள்ளத்தால் ஈமான் கொண்டு நாவினால் மொழிவதே போதும். செயல்கள் சம்பந்தப்படாது என்றார்கள். இதனால் பெரும்பாவியைக்கூட

னாக இருப்பான்; அல்லது பொய்யனாகிய புனைந்துரைப்பவனாக இருப்பான்.

நலவை நாடுவதின் அவசியம்

இதுவரை கூறப்பட்ட, வரம்புமீறிப் பேசுகின்ற, மேலும் மார்க்க அறிஞர்களைக் கடுமையாக மறுக்கின்ற இவர்கள் போன்றோர் சரியான பாதையில் திரும்பி வருவதற்காக இவர்களுக்கு நலவை நாடுவது முஸ்லிம்கள்மீது கட்டாயக் கடமையாகும். அப்போதுதான் இஸ்லாமியச் சமுதாயம் பாவத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் தப்ப முடியும். எனவே, அவர்கள் விசயத்தில் நலவை நாடுங்கள். ஏனெனில், மார்க்கம் என்பதே நலவு நாடுவதுதான். மேலும், அவர்களது பேச்சு முஸ்லிம்களுக்குப் பெரும் அபாயமாகும். அவர்களது பேச்சின் மூலம் இஸ்லாமியச் சமுதாயம் பிளவுபட்டு, பலவீனமாகி, முஸ்லிம்களுக்கிடையே விரோதம் அதிகமாகி, இஸ்லாமிய மார்க்க அறிஞர்களின் நம்பகத்தன்மை போய், சமுதாயத்திற்கும் மார்க்க அறிஞர்களுக்கும் இடையிலான எதிரிகளை அழிக்கின்ற நம்பகத்தன்மை என்ற பந்தம் முற்றுப் பெற்றுவிடும். இறுதியில் பெரும் ஞானச்செல்வமே பாழாகிவிடும்.

ஆகவே, மார்க்க அறிஞர்களின் குறைகளைத் துருவிப் பார்ப்பவர்கள் அல்லாஹ்விடம் பாவமீட்சி செய்வதும் இவ்வாறான பாதைகளில் எட்டுக்கள் வைப்பதை விட்டும் தடுத்துக்கொள்வதும் அவசியமாகும். ஏனெனில், அவை ஷைத்தானின் அடிச்சுவடுகளில் உள்ளவை. அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

يَـا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّـيْطَانِ وَمَـنْ يَتَّبِعْ خُطُوَاتِ الشَّـيْطَانِ فَإِنَّهُ يَأْمُرُ بِالْفَحْشَـاءِ وَالْمُنْكَرِ وَلَوْلَا فَضْلُ اللَّهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهُ مَا زَكَى مِنْكُمْ مِنْ أَحَدٍ أَبَدًا وَلَـكِنَّ اللَّهَ يُزَكِّي مَنْ يَشَاءُ وَاللَّهُ سَمِيعٌ عَلِيمٌ

அல்லாஹ்வை நம்பிக்கைகொண்டவர்களே! ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள். (ஏனென்றால்) எவன் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்கிறானோ அவனை அவன் மானக்கேடான விசயங்களையும், பாவமான செயல்களையும் செய்யும்படி நிச்சயமாகத் தூண்டிக் கொண்டே இருப்பான். அல்லாஹ்வுடைய அருளும், கருணையும் உங்கள் மீது இல்லாதிருப்பின் உங்களில் ஒருவருமே எக்காலத்திலும் பரிசுத்தவானாக இருக்க முடியாது. எனினும், அல்லாஹ் தான்